

உ

ஓம் விராட் விஷ்வப்பிரமனே நம

குரும்பசிட்டி கிழக்கு

# திருவருள் மிகு ஞான வைரவர்

## புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக மலர்

25.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஷ்வ் பிரமனே நம



# குரும்பசிட்டி கிழக்கு

# திருவருள் மிகு ஞான வைரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# குரும்பசிட்டி கிழக்கு
# திருவருள் மிகு ஞான வைரவர்



# புனராவர்த்தன
# மகா கும்பாபிஷேக மலர்

**25.03.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை



# குரும்பசிட்டி கிழக்கு
# திருவருள் மிகு ஞான வைரவர்

மங்களகரமான ஜய வருடம் 25.03.2015
புதன்கிழமை ரோகிணி நட்சத்திரமும் அமிர்த சித்தமும்
ஷஷ்டி திதியும் 9.25 மணி முதல் 11.08 வரையுள்ள
கூடிய சுபவேளையில் புனராவத்தன
மகாகும்பாபிஷேகம் தொடர்பான

# மகா கும்பாபிஷேக மலர்

## 25.03.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

புண்ணிய பூமியாம் யாழ் குடா நாடதனில் புகழ்மிகு

வடபால் இலங்குகின்ற அரசடி நிழலிலே மனமகிழ

வீற்றிருக்கும் மான்புறு எம்மிறையாம் ஞான வைரவரின்

மகா கும்பாபிசேகத் திருவிழா நாளதிலே

மனங்கவர் ஆக்கங்கள் அமைந்தருள மலரினை

ஞமலி வாகனமாமி நலந் தரு நாயகனின்

கமலத் திருவடிக்குச் செய்வோம்

சமர்ப்பணமே.

வெளியீட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே நுழையும் முன் சில வார்த்தைகள்....

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்பர் ஆன்றோர். இதற்கு மிகப் பொருத்த மாக அமைந்துள்ள ஆலயங்களுள் ஒன்றே எமது ஊர் ஞான வைரவர் ஆலயம் எனின் அது மிகை ஆகாது. யாழ்ப்பாணக் குடா நாட்டில் வரலாற்றுப் பெருமை மிக்க ஊராகிய குரும்பசிட்டி கிழக்கில் அமைந்துள்ளதே இந்த ஆலயம். இன்று முப்பது வருடங்களின் பின்பு புனர்த்தானம் செய்யப் பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. தன்னையே தஞ்சம் என்று நாடிவரும் அடியவர்க்கு இன்னருள் புரிந்து நிற்கும் வைரப் பெருமானுக்கு இத் திருப்பணிக்காகப் பக்த கோடிகள் வாரி வழங்கிய நிதி மற்றும் பொருளுதவிகளால் இன்று இந்த ஆலயம் சிறப்புற அமைந்திருக்கின்றது. இது அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. ஜெய வருடம் பங்குனி மாதம் (25.03.2015) புதன்கிழமை குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அரசடி நிழலில் ஞான வைரவராகவும் ஆதி மூர்த்தி ஞான வயிரவராகவும் எழுந்தருளி இருந்து அருள்பாலிக்கும் எம்பெருமானின் திருவருளில் நனைந்த எம் பக்தர்கள் பக்தி மேலீட்டினால் வைரப் பெருமான் மீது பாடிய பாடல்கள் கும்பாபிஷேக நாளில் எம் காதுகளில் இனிமையான தேனருவியாக நிறைந்தன. இவ்வாறான பாடல்கள், பஜனைகள் என்றும் எழுதப்பட வேண்டிய என்றோர் எண்ணத்தினால் கும்பாபிஷேக மலரை வெளியிட முனைந்தோம். இக்காரியத்துக்கு ஆலயத்தில் ஈடுபாடு கொண்ட அடியார்களின் ஆக்கபூர்வமான உதவியும் கிட்டியதனால் அவர்களுடன் இணைந்து இம்மலரினை சிறப்பானதாக வெளியிட முடிகின்றதென்பது இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

இம் மலரானது வைரப் பெருமானின் சிறப்பினைப் பலரும் அறிந்து கொள்ளப் பேருதவியாக இருக்கும். எமது பக்தர்கள் பாடிய பாடல்கள் பஜனைகள் மூலமாக நாம் இறையருளைப் பெறவும் வழி வகுத்துள்ளது. மாற்றான் தோற்றத்து மலரினால் இறைவனைப் பரவுதலிலும் பார்க்க எமது தோட்டத்தில் பூத்த மலர்களினால் பரவும்போது மகிழ்ச்சியும் மன நிறைவும் ஏற்படுமல்லவா.

வன்முறைகளும் அநீதிகளும் பெருகிச் செல்லும் இக் கலியுகத்தில் மக்கள் மனங்களின் வன்முறைகள் அகற்றி மனிதாபிமானம் அன்பு அடக்கம் நேர்மை ஆகிய நல்வழியில் மக்களை இட்டுச் செல்ல சமயங்களால் மட்டுமே முடியும். இதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான ஒரே வழியாகும்.

ஆகையால் சைவ சமயிகளான நாம், நாம் சார்ந்த ஆலயங்களினூடாக எமது சிறார்களை சமய நெறியில் இட்டுச் சென்று நல்லொழுக்கம் நற்பண்பு என்பவற்றை வளர்த்து எமது சமுதாயத்தை பேரழிவிலிருந்து காப்பதற்குத் திட சங்கற்ப்பம் பூணுவோமாக.

மனிதன் உள்ளவரை தான் மானிடன் வாழ முடியும். எமது முயற்சி நீதியானதும் நேர்மையானதுமாக இருப்பதனால் எம் எல்லோர்க்கும் ஞான வைரவப் பெருமான் உறுதுணையாக நிற்பான் என்பது உறுதி.

**வெளியீட்டுக்குழு சார்பாக**
**வெ.தேவசீலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....


- **ஆசியுரை**
    1. ஆதின முதல்வர்
    2. குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு

- **வாழ்த்துரை**
    1. மதிப்புக்குரிய முன்னாள் துணை வேந்தர்.
       யாழ் - பல்கலைக்கழகம்.
    2. அதிபர்- பொன் பரமானந்தர் மகாவித்தியாலயம்
    3. ஞான வைரவர் தேவஸ்தான தலைவரின் கருத்துக்கள்
    4. கிராம முன்னேற்றச் சங்கம் - குரும்பசிட்டி
    5. வளர்மதி சனசமூக நிலையம் - குரும்பசிட்டி
    6. கலைமகள் சனசமூக நிலையம் - குரும்பசிட்டி

- **ஞான வைரவர் தேவஸ்தான வரலாற்றுச் சுருக்கம்**

- **வைரவர் பாடல்கள்**

- **ஸ்ரீ பைரவர் வழிபாடு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளாசிச் செய்தி

சிவநேயச் செல்வங்களே,

குரும்பசிட்டி கிழக்கில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் ஞான வைரப் பெருமானிற்கு இன்று மகா கும்பாபிஷேகம் இடம்பெறுவதையிட்டு மகிழச்சியடைகின்றோம். காவல்த் தெய்வமாக விளங்கும் வைரவப் பெருமான் வேண்டுவார் வேண்டுவதை ஈகின்றவனாக வீட்டு வளமும் மக்கள் கூடுகின்ற இடங்களிலும் வீற்றிருந்து அருள்புரிகின்றான். குடும்ப ஆலயமாக விளங்கும் இவ் ஆலயம் இன்று பெரிய கட்டடங்களுடன் விளங்குவது மகிழ்ச்சியைத் தருகின்றது. விஷ்வப் பிரமன மக்களின் வழிபாட்டிற்கும் ஆலயத்திற்குக் கும்பாபிஷேகம் இடம்பெறுவது சிறப்புடையதாகும். இக்கும்பாபிஷேகம் சிறப்படைந்து அனைவருக்கும் இன்பம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்பம்"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹாசந்நிதானம்,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

குரும்பசிட்டியில் வாழ்ந்து தன்னை வழிபடும் அடியார்களை காலம் காலமாக காத்தருள் புரியும் அருட் சிறப்புடையவர் நம் ஞான வைரவ சுவாமி என்பதை என்னைப் போல பலரும் அறிவர். இப்பெருமானின் அருளில் மகிழ்ந்த அடியவர்கள் இப்பொழுது ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நிகழ்த்துகின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் ஞான வைரவப் பெருமானின் பெருங்கருணை நன்கு கிடைக்க வேண்டும் என அப்பெருமானை சிந்தித்து வணங்கிக் கொண்டு என் ஆசியை அனைவருக்கும் தெரிவிக்கின்றேன்.

வாழ்க வளமுடன்

**திரு.இரத்தினசாமி ஐயா**
**குரும்பசிட்டி முத்துமாரி**
**அம்மன் தேவஸ்தானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரின் வேண்டுதல்

எங்கள் கிராம மக்களின் உயிர்பு மையங்களாக வைரவர் ஆலயங்கள் விளங்குகின்றன. காலணித்துவ காலத்து எங்கள் பண்பாடு காத்த பெருந் தெய்வம் வைரவர் சுவாமி. இந்த வகையில் குரும்பசிட்டி கிழக்கில் எழுந்தருளும் ஞான வைரவ சுவாமிக்கு மஹா கும்பாபிஷேகம் என்ற செய்தியிலே மனது மிகவாய் நிறைகின்றது. அந்நாளில் எங்கள் ஆசிரியர் க்லாகேசரி தம்பித்துரை சேருடன் இவ் ஆலயத் திருவிழாக் கண்ட நாள் நினைவுகள் நெஞ்சில் பசுமையாய் காக்கப்பட்டுள்ளன.

விஷ்வ குல மக்களின் அயராத பக்தியிலே ஆலயம் இன்று எழுச்சி கண்டுள்ளது. இந்தப் பெரும் பணியில் ஒன்றிணைந்த திருவருள் தேவசீலன் முதலாய அத்தனைபேரும் நம் போற்றுதற்கினியவர்கள். வைரவ சுவாமியின் கருணைக்கும் பாத்திரமானவர்கள்.

ஆலயத்தின் எழுச்சியுடன் மக்களின் வாழ்வாதார மேம்பாடும் வளர்ச்சி கண்டி பிரார்த்திக்கின்றேன். கூடவே சூழவுள்ள எங்கள் தென்மயிலை கட்டுவன் ஈறான கிராமங்கள் யாவும் இந்த கும்பாபிஷேகத்தோடு மீள உயிர்பெற ஞான வைரவப் பெருமானின் பெருங் கருணையை இறைஞ்சுகின்றேன்.

**எல்லையில்லாத அன்புடன்**

**சிரேஷ்ட பேராசிரியர்**
**கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கம்**
**முன்னாள் துணைவேந்தர்,**
**தலைவர்,**
**சமூகவியல்துறை,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி



ஈழத்து சைவ மரபினர் தமது பண்பாட்டு பகைப் புலத்தில் தம் வாழ்வை தக்கவைக்க காவல் தெய்வமாக இருந்து பெரிதும் உதவி நின்றவர் வைரவப் பெருமான். ஐரோப்பியரான போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சி எம் மண்ணை ஆக்கிரமித்தபோது வைரவ வழிபாட்டினூடாகவே எமது மக்கள் தமது பண்பாட்டு பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்தனர். பெருங்கோவில்களைப் பேணிப் பாதுகாத்தனர். பெருங்கோயில்கள் எல்லாம் இடிபடும்போது வளவுக்குள் கிணற்றடியில், தோட்டங்களில் சூலங்களைத் தாபித்து பொங்கல் வைத்து வடை, பணியாரங்கள் ஆக்கிப் படைத்து பூவும் தண்ணீரும் ஊற்றி தமது வாழ்வின் மீதான நம்பிக்கையை பெரிதும் போற்றி வந்தவர்கள் யாழ் குடாநாட்டு மக்கள்.

சமகாலத்திலும் பல்வேறு விதேசியப்படை நடவடிக்கைகளால் சிதைக்கப்பட்டவேளை எமது கோயில்களை மீளப் புனருத்தாரணம் செய்து கட்டி எழுப்பி கும்பாபிஷேகங்களை நடாத்தி வருவதற்கு நாம் செய்த புண்ணியம் கோடி. "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" எனும் மாணிக்கவாசகர் வாக்கிற்கு இணங்க இன்று குரும்பசிட்டி கிழக்கு வைரவர் தேவஸ்தானம் புதுப்பொலிவுடன் விளங்கி அடியார்கு அருள்பாலிக்க தெய்வசித்தம் உண்டாகி யுள்ளது.

எல்லாம் வல்ல வைரவப் பெருமாள் துணைகொண்டு தேவஸ்தான நம்பிக்கைப் பொறுப்பாளரும், குருக்கள் ஐயா அவர்களும் மக்களுடன் இணைந்து சிறப்பான முறையில் கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காண்போமாக. அனைவருக்கும் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்,**
**சிரேஷ்ட விரிவுரையாளர், மொழி பெயர்பாளரும், இணைப்பாளரும்,**
**ஆங்கில மொழித் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஆசி செய்தி

ஈழ மணித்திரு நாட்டில் வேண்டுவார் வேண்டுவற்றை ஈன்று அருளும் அருள் மிகு குரும்பசிட்டி ஞானவைரவர்க்கு மகா கும்பாபிஷேகம் மலரொன்றை மலர்வதற்கு ஞானவைரவரின் அருட்கடாச்சம் கிடைத்திருக்கின்றதையிட்டு மன மகிழ்வடைகின்றேன்.

மேலும் இறைவன் பல்வேறு வடிவங்களிலும் காட்சி தந்து அருள் பாலிக்கும் இடம் ஆலயங்களாகும். அந்த வகையில் ஞான வைரவர் ஆலயமும் மிகக் குறுகிய காலத்தில் மிக விரைவாக கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு மகிழச்சிக்குரிய விடயமாகும்.

அதுமட்டுமல்ல அவர்கள் சைவப்பணி, சமயப்பணி, சமூகப்பணியென்று பல பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதற்குச் சான்றாக அன்றைய தினம் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் மாணவர்களுக்கு புத்தகப் பைகள் கையளிக்கும் நிகழ்வும் இடம் பெறவிருப்பது மன நிறைவைத் தருகின்றன.

மேலும் இடப்பெயர்வால் இவ்வூர் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள் நீங்கி இன்பங்கள் பெருகி சகல சௌபாக்கியங்களும் பெற்று நிறைவான வாழ்வு வாழ ஞான வைரவர் என்றும் அருள் புரிய வாழ்த்துகிறேன்.

**அதிபர்,**
**திரு.இ.தேவராசா,**
**யா/பொன் பரமானந்தர் ம.வி.,**
**குரும்பசிட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி கிழக்கு ஞான வைரவ ஆலய தலைவரின் கருத்துக்கள்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்ற முதுமொழிக்கிணங்க காவற் கடவுளாக எமது கிராமத்தில் சிறந்து விளங்கும் குரும்பசிட்டி ஞான வைரவப் பெருமானைப் போற்றி என்றும் வழிபடுவோமாக. பொங்கி மடை பரவி வடைமாலை சாத்தியும் எம்பெருமான் வழிபாடு சிறப்பாக நடை பெறுவது கண்கூடு. ஆலயத்துடன் தொடர்புடைய அடியவர்கள் அனைவரும் பங்குனி மாதம் புதன்கிழமை 25.03.2015 சிறப்பாக நடந்தேறிய மகாகும்பாபி ஷேகத்திற்கு வருகை தந்து தரிசித்து அருளாசிகளைப் பெற சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தமை சகலருக்கும் மன நிறைவாகவும் பெருமிதத்தையும் தருகின்றது.

மகாகும்பாபிஷேக நிகழ்விற்கு அரும்பணியாற்றிய சிவாச்சாரியார் கட்கும் மற்றும் இம்மலரிற்கு ஆசியுரைகள் தந்த சிவாச்சாரியர்களிற்கும் நல்லை ஆதின முதல்வர் கல்விமான்கள் அனைவர்க்கும் நன்றி தெரிவிப்ப துடன் மேலும் ஆலய புனரமைப்பிற்கும் மகாகும்பாபிஷேகத்திற்கும் தம்மால் இயன்ற பண உதவி பொருளுதவி, சரீர உதவி வழங்கிய உள்நாட்டு வெளிநாட்டு எமது உறவுகளுக்கும் அடியார்க்கும் எனது மனப் பூர்வமான நன்றி உரித்தாகட்டும்.

மலரில் கட்டுரை, பாடல்கள், விளம்பரங்கள், புகைப்படங்கள் வழங்கியோர் மற்றும் வெளியீட்டிற்கு உதவியோர் யாவர்க்கும் வைரப் பெருமான் அருள் புரியப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**திரு.வெ.தேவசீலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்
KURUMPASIDDY RURAL DEVELOPMENT SOCIETY

Kurumpasiddy,
TELLIPPALAI.

பதிவு இல / Regd. No.
RD/NEP/J/VN/242/1

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

BANK : PEOPLE'S BANK C/A NO . 2995, KANKESANTURAI.

# வாழ்த்துச் செய்தி

வலி – வடக்கு பிரதேசத்தில் சைவ தமிழ் பாரம்பரியங்களைக் கண்ணெணப் போற்றி சகல துறைகளிலும் தனக்கே தனித்துவத்தைப் பேணி வந்த கிராமம் குரும்பசிட்டி. இத்தகைய சிறப்புக்கும் பெருமைக்கும் அடித்தளமாக இருந்தவை கிராமத்தில் அருளாட்சி புரிந்து வந்த ஆலயங்களும் கல்வியறிவூட்டி நின்ற வித்தியாலயமும் கலை வளர்த்த பொதுப்பணி மன்றங்களும் என்றால் அது மிகையாகாது. கிராமத்தில் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயம், சித்தி விநாயகர் ஆலயம் ஆகிய இருபெரும் ஆலயங்களுடன் அவரவர்களுக்குரிய இஸ்ட தெய்வங்களையும் குல தெய்வங்களையும் பூசிக்கவென பல சிறு ஆலயங்களும் அமைந்திருந்தமை கிராமத்துக்கு பெருமை சேர்த்திருந்தன.

இந்த வகையில் கிராமத்தின் எல்லைப் புறங்களிலும் மத்திய பகுதியிலும் பல வைரப் பெருமானது ஆலயங்கள் அமைந்திருந்தன. குறிப்பாக போரியன் வைரவர் ஆலயம், புளியடி வைரவர் ஆலயம். ஆறாத்தை வைரவர் ஆலயம், தனக்கடி வைரவர் ஆலயம், மாவடி வைரவர் ஆலயம், அரசடி வைரவர் ஆலயம் என்பவற்றுடன் இனைறு கும்பாபிசேகத்தினைக் காணும் ஞான வைரவராலயமும் பெருமைக்குரிய ஆலயங்களாகும்.

இவ்வாலயங்கள் சூழ குடியிருந்து வைரவப் பெருமானை தனது குலதெய்வமாக பூசித்த மக்கள் ஆண்டுதோறும் பொங்கல் படைத்து வைரவப் பெருமானைப் பூசித்து வந்ததுடன் தாம் மேற்கொள்ளும் சுபகாரியங்கள், பிரயாணங்கள், சடங்குகள் யாவற்றையும் ஆரம்பிக்கும்போது தமது குலதெய்வத்தினை வணங்கி தொடங்கி மன நிம்மதி அடைந்தனர்.

தவிர்க்க முடியாத போர்க்கால சூழலுக்குள் அகப்பட்டு இடம்பெயர்ந் திருந்த போதும் தமது குலதெய்வங்களை மனதில் சுமந்திருந்தவர்கள் எம் மக்கள். இன்று மீளக் குடியமர்வதற்கு கிராமத்தின் ஒரு பகுதி விடப்பட்டிருக்கும் வேளையில் தாம் பிறந்து வாழ்ந்த மண்ணை முட்பற்றைகளுக்கும் முட்கம்பி வேலிகளுக்குள்ளும் இருந்து மீட்டு மீண்டும் எமது கிராமத்தை மிடுக்குற வைக்க வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர். மீளக் குடியமர்வதற்கு முன்னர் தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசித்த ஆலயங்களை மீள புனரமைத்து தெய்வ கடாட்சத்துடன் குடியமரும் பண்புடையவர்களாக மக்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வகையில் அருள்மிகு ஞானவைரவப் பெருமானுடைய ஆலயமும் புனரமைக்கப்பட்டு கும்பாபிசேகத்தினைக் காணும் பேற்றினை பெற்ற வகையில் நாம் எல்லோரும் பெரும் பாக்கியம் பெற்றவர்களாவோம்.

அருள்மிகு ஞானவைரவப் பெருமானுடைய அருளும் கடாட்சமும் ஆலயத்தை அண்டி ஆதரித்து வாழ்ந்த குடிகளும் மக்களுக்கும் விளை நிலங்களுக்கும் மீண்டும் கிடைக்க வேண்டும் என்று ஞான வைரவப் பெருமானுடைய பாதார விந்தங்களைப் பணிவோமாக.

**தலைவர்**
**திரு.கு.இராசநாயகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம்

KURUMBASIDDY VALARMATHY COMMUNITY CENTRE

**Kurumbasiddy - Tellippalay**

Regd No. : 1VC/26CC/269 Estd. : 12.10.1967

President Treasurer Secretary

# வாழ்த்துச் செய்தி

குரும்பசிட்டி அருள்மிகு ஞான வைரவர் ஆலயம் மீண்டும் புதுப்பொலிவு பெற்று கும்பாபிஷேகத்தினைக் காணும் இந்நாள் மக்கள் மனம் குளிரும் நாள் எம் மண் குளிரும் நாள்.

வைரவப் பெருமான் எதிரிகளுக்கு பயத்தைக் கொடுப்பவர் தம்மை அண்டியவர்களுக்கு அருளைக் கொடுப்பவர். சிவனின் மறு வடிவமாக உருவாகி பிரமாவின் ஒருதலையைக் கிள்ளி எறிந்து அவனது அகந்தையை அடக்கியவர். எட்டுத் திக்கிலும் அவரது அருளாட்சி நிலைபெறும் வகையில் அட்ட வைரவராக சிறப்புப் பெறுபவர். சிவாகமங்களும் சிற்ப நூல்களும் அவரது நிலைகளை அறுபத்து நான்கு வகைகளாக இன்னும் சில நூற்றியெட்டு வடிவங்களாக வகைப்படுத்தி பெயர் குறிப்பிட்டு நிற்கின்றன.

அவர் கைகளில் உள்ள உடுக்கை படைத்தல் தொழிலையும் கையில் உள்ள கபாலம் காத்தல் தொழிலையும் உடலில் பூசிய வெண்ணீறு ஒடுக்கல் தொழிலையும் குறித்து நிற்பன. இந்த வகையில் ஆனந்த வைரவராக படைத்தல் தொழிலையும் கால பைரவராக காத்தல் தொழிலையும் காலாக்கினி வைரவராக அழித்தல் தொழிலையும் புரிகிறார்.

கடவுள் வழிபாடு செய்துவிட்டு அதற்கான பலன்களை எதிர்பார்க்கும் பக்தர்களுக்கு உடனடி நிவாரணம் தரும் கடவுள் வைரவப் பெருமான் ஆவர். சிவபெருமானின் பஞ்ச குமாரர்களில் ஒருவராக குறிக்கப்படும் வைரவர் (வைரவர், கணபதி, முரகன், வீரபத்திரர், ஐயனார்) வலிமை மிக்க ஞான மூர்த்தியாக சிருஷ்டிக்கப்பட்டவர்.

இத்தகைய மகிமை பெற்ற வைரவப் பெருமானை குல தெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் வழிபடும் மரபு எமது கிராமத்தில் மட்டுமல்ல இந்தியாவிலும் இலங்கையின் பல பாகங்களிலும் காணப்படுகின்றன. இவ்வாறான குலதெய்வ வழிபாடு சக்திமிக்கவை. ஒவ்வொருவரும் தத்தமது இஷ்ட தெய்வங்களை வழிபட்டாலும் தமது குலதெய்வங்களை முதனிலைப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த வேண்டும். நாம் தொடங்கும் எல்லாக் காரியங்களுக்கும் எவ்வாறு விநாயகப் பெருமானை முதல் நிலைப்படுத்துகிறோமோ அதேபோன்று குல தெய்வங்களையும் முதல்நிலைப்படுத்தல் அவசியமாகும்.

இந்த வகையில் குரும்பசிட்டி கிழக்குப் பகுதியில் ஞானவைரவராக எழுந்தருளி அருள்பாலிக்கும் எம்பெருமானது ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகத்தினை காணும் இந்நாளில் எம்பெருமான் தன்னை அண்டி வாழ்ந்த மக்களுக்கும் இக்கும்பாபிஷேகப் பணியை முன்னின்று செயற்படுத்துபவர்களுக்கும் கும்பாபிஷேக நிகழ்வினைக் காணப் பாக்கியம் பெற்றவர்களுக்கும் அருட்கடாட்சம் நல்க வேண்டும் என்றும் பிரார்த்திப்போம்.

**திரு.அ.சக்திவேல்.**
**தலைவர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவமயம்

# கலைமகள் சனசமூக நிலையம்
# KALAIMAKAL COMMUNITY CENTRE

குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை.
Kurumpasidy East, Thellipalai

# வாழ்த்துச் செய்தி

இயற்கையின் வனப்பும் அதன் செழிப்பும் இதம் தரும் தென்னங் கீற்றுத் தென்றலும் இனிய சுவைமிகு கனிமரங்களும், இன்புற்று வாழ்ந்த மக்களுமாய், அத்தனையும் நிறைந்த அழகொளிக்கும் பசும் சோலையாய் மிளிர்வு பெற்ற குரும்பசிட்டிக் கிராமத்தின் கிழக்குத் திசையிலே விஷ்வ குலத் தோன்றலில் அவதரித்து செய்கின்ற ஞானவைரவராய் பெருமானின் தாழ்பணிந்தேற்றித் தொழுது...

எங்கும் வியாபித்திருக்கின்றவன் இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் பொருட்டு உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளி இருக்கின்ற இடமே ஆலயமாகும். அவ்வாறு பன்நெடுங்கலமாக கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கின்ற இடமே ஆலயமாகும். அவ்வாறு பன்நெடுங்காலமாக கோவில் கொண்டு வேண்டுவோர்க்கு எல்லாம் வேண்டும் வரம் கொடுத்து அருள்பாலித்துக் காத்தருளும் எம் அப்பன் ஞான வைரவப் பெருமானுக்கு சிறந்த கலை அம்சங்கள் பொருந்திய ஆலயம் நிர்மானிக்கப்பட்டு நடைபெறும் மஹாகும்பாபிஷேகம் சிறப்புற அமையும் அவ்வேளையிலே ஆலயத்தின் மகத்துவத்தைத் தாங்கி வெளிவரும் மலருக்கும் எமது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிப்பதில் அகமகிழ்வடைகின்றோம்.

| | |
|---|---|
| தலைவர் / President | செயலாளர் / Secretary |
| தலைவர் | கலைமகள் சனசமூக நிலையம் |
| கலைமகள் சனசமூக நிலையம் | குரும்பசிட்டி கிழக்கு, |
| குரும்பசிட்டி கிழக்கு, | தெல்லிப்பழை. |
| தெல்லிப்பழை, | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரும்பசிட்டி ஞானவைரவரின் வரலாற்றுச் சுருக்கம்

சிவ பூமி எனவும் புண்ணிய பூமி எனவும் போற்றப்படுகின்ற இவ் இலங்கை திருநாட்டில் யாழ்ப்பாண மாநகரில் வலி வடக்கில் ஆன்மீகமும் அருளும் சைவமும் நற்றமிழும் பொலிவுற விளங்கிய குரும்பசிட்டி என்னும் பதியில் அடியார்களின் மனக் குறையை அறிந்து வேண்டுவார் வேண்டுவன வற்றை வாரி வழங்கி நமலி வாகன சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள் புரிந்து வருகின்றனர் ஞான வைரவப் பெருமான்.

இவர் இற்றைக்கு நூற்றாண்டு காலமாக விஸ்வ குல மக்களால் ஸ்தாபிக்கப் பெற்று இவ்வூரில் உள்ள எல்லா மக்களுக்கும் நோய் நொடி இனறி கல்வி, செல்வம், வீரம் என்று எல்லா வளமும் வழங்கி அருள் பாலித்து சின்னச் சிங்கப்பூர் என செல்லமாக வழங்கப்படும் எமது ஊரில் வீற்றிருந்தார்.

கோயிலின் பின் புறச் சூழலில் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களின் கலாகேசரி கலாலயம் என்னும் சிற்பாலயம் அமைக்கப்பெற்று அங்கே இருந்து நாட்டின் பல்வேறு ஆலயத்திற்கும் பல தெய் வாகனங்கள் செய்யப்பட்டு இவ் ஆலயத்தில் முதல் வந்து கற்பூரம் ஏற்றி தேங்காய் உடைத்தே எல்லா ஆலயத்திற்கும் சென்று வந்துள்ளன. வடக்குப் பக்காக சிறு தோட்டப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வந்துள்ளனர். இவ் விவசாயிகள் பயிர்கள் அறுவடையின்போது எம்பெருமானுக்கு முதன் முதலில் காய் கறிவகைகளை காணிக்கை செய்வது வழிமையாக உள்ளது. முற்பட்ட காலங்களில் இவ் தேவஸ்தானத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை யும் எவ் வேலையாயினும் அதை ஒதுக்கிவிட்டு திரு.த.கந்தையா அவர்கள் எல்லாப் பிள்ளைகளையும் அழைத்து பஜனைப் பாடல்கள் பாடி நல்வழிப்படுத்தி வந்துள்ளார். பழைய ஆலயத்தின் சுவர்கள் வெ.பத்மநாதன் என்பவரால் சிறுபராயத்திலிலேயே அழகான உயிரோவியங்கள் வரையப்பெற்று காட்சி அளிக்கப்பட்டன. இங்கே ஓர் வேலாயுதம் அன்று தொடக்கம், இன்றுவரை பூசைசெய்து வரப்படுகின்றது. முன்னோர்கள் பூசை நேரங்களின் போது இவ் வேலை உடுக்கு ஒலியுடன் உருக்கொண்டு எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி வாக்குச் சொல்லியதாக வரலாறு உண்டு. இவ் ஆலயம் சிறிதாக இருந்தபோது அப்போதைய இளம் பெண் பிள்ளைகளே வைரவர் சூலத்திற்கும் நாகதம்பிரானுக்கும் அபிஷேகம் செய்தும் பூக்களால் அலங்கரித்தும் மாலை கட்டி அணிந்தும் தேவாரப் பண்ணிசை பாடித் துதித்து வந்துள்ளார்கள். இடப்பெயர்வின் போது இவ் ஆலயத்தை அமரர்களான மு.மாணிக்கவாசகர், முத்துக்குமாரு, பொன்னம்பலம் ஆகியோர்களால் மிகச் சிறப்பாக நடாத்தி வரப்பட்டுள்ளது.

இவ்வேளையில் நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்துள்ளார்கள். தற்போது நாட்டில் ஏற்பட்ட சமாதான சூழலால் அரசாங்கமானது எமது ஊரின் ஒரு பகுதியை மீளக் குடி அமர விடுவித்தது. இதனால் மீளக் குடியமரும்போது எமது ஆலயங்கள் வீடுகள், பாடசாலை, சனசமூக நிலையங்கள், கடைகள் எனப் பல கட்டடங்களும் தரை மட்டமாக்கக் காட்சி அளித்தன. இதனைப் பார்த்து எமது மக்கள் மிகவும் வேதனை அடைந்தார்கள். சில மாதங்களில் தமது மனதை ஆற்றினார்கள்.

சில மாதங்களின் பின்பு எமது ஊரில் மத்தியில் அருள் பாலித்து வந்த முத்துமாரி அம்பாள் ஆலயத்தை மீளப் புதிதாக அமைத்து மகா கும்பாபிஷேகத்தையும் நடாத்தி வருடாந்த மகோற்சவத்தையும் நடாத்தி அருளைப் பெற்று தொடர்ந்து வீடுகள், பாடசாலை, சனசமூக நிலையங்கள் வைத்தியசாலை, சிறு ஆலயங்கள், வீதிகள் போன்றவற்றை புனரமைக்கத் தொடங்கினார்கள்.

இதன் வரிசையில் எமது இவ் ஆலயமும் முழுமையாக இடிந்து காணப்பட்டதால் வெளியூரிலிருந்து வந்த வெ. கமலக்கண்ணன், திருமதி கமலக்கண்ணன், திரு.மா.தேவதாஸ் அவர்கள் புனருத்தாரண பணியைத் தொடக்கி வைத்தனர். இதனைத் தொடர்ந்து பாலஸ்தாபனத்தை எமது ஊரிலுள்ள முத்துமாரி தேவஸ்தான பிரதம குரு அவர்களால் நடாத்தினர். இவ் அபிஷேக தினத்தை திருமதி பாலமகிந்தனால் உபயமாக செய்து முடித்து அருளைப் பெற்றனர். எம் பெருமாளின் அருளால் எமது வெளியூர் உறவுகளால் காலம் தாழ்த்தாமல் உடனே பண உதவிகளை அனுப்பி உதவியதால் இத் திருப்பணியை இனிதே நிறைவு செய்துள்ளது. இத் திருப்பணியை நிறைவு செய்வதற்கு மீளக் குடியமர்ந்த திரு.திருமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவரூபன் இவர்களின் அளப்பரிய பங்களிப்பு மிகவும் பாராட்டுதலுக்குரியது.

பல வருடங்களின் பின்பு இவ் இடத்தில் இன்று வேதியர்களின் மந்திரங்கள் ஒலிக்க மேள தாளங்கள், நாத சுரங்களின் நாதமும் ஆலய மணிகளின் ஓசையும் ஒலிக்க தேவர்களின் ஆசியுடன் அடியவர்களின் அரோகராச் சத்தமும் முழங்குகின்றது. இதனால் இவ் இடத்தில் ஏற்பட்ட கெட்ட சகுணங்கள் ஓட எம் பெருமாளின் அருள் எல்லா இடமும் பரவுகின்றது. இத்துடன் எமது மக்களின் துயர்கள் நீங்கவும் வெளியூரிலிருக்கும் எமது உறவுகளிற்கும் எமது ஊரில் மிகுதி பகுதி விடுபட்டு மக்கள் மீளக் குடியமர்த்தும் எல்லா வளமும் பெற ஞான வைரவப் பெருமானின் அருள் கடாட்சம் கிடைக்க வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சரணம்! சரணம்!!

ஞான வைரவர் அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் விராட் விஷ்வப் பிரமனே நம



30 வருடங்களுக்கு முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் பாடல்கள்

தீர்த்தம் எடுத்தினமே ஞான வயிரவா
உனக்கு திருபூஜை செய்தினமே
ஆதி வைரவா

பாலாலே அபிஷேகம் நான் ஞான வைரவா
உனக்கு பட்சமாக செய்தினமே
ஆதி வைரவா

இளநீரால் அபிஷேகம் ஞான வைரவா
உனக்கு இன்பமாகவே செய்கினமே ஆதி வைரவா

கற்பூர வாசனையோ ஞான வைரவா
உனக்கு கமறி மணம் வீசு நடா ஆதி வைரவா

பூவாலே அபிஷேகம் நான் ஞான வைரவா
உனக்கு புனிதமாக செய்கின்றேன் ஆதி வைரவா

குரும்ப நகர் வீற்றிருக்கும் ஞானவைரவா
எங்கள் குலம் காக்க வேண்டுமையா ஆதி வைரவா

தீர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடு தாய நமஓம் வடுதாய நம ஓம்
வடு தாய வடுதாய வடுதாய நம ஓம்
வைரவா நம ஓம் வைரவா நம ஓம்
வைரவா வைரவா வைரவா நம ஓம் (வடுவாயா)

வந்த துன்பத்தை தீர்ப்பாய் வைரவா
வந்து உதவி அழிப்பாய் வைரவா
வைரவ வைரவ வைரவா நம ஓம்
வைரவ வைரவ வைரவ நம் ஓம் (வடுவாயா)

வருவாய் வருவாய் கருநாய் மீது
வந்து நம்மைக் காத்திடுமே நிற்பாய்
காவலுக்குத் தான் ஞான வைரவா
கருணை உள்ளம் கொண்டு காப்பாய் (வடுவாயா)

**பல்லவி**

குரும்பை நகர் தனில்
குடி யிருப்பவன்
எங்கள் நாதன் வைரவனே (குரும்பை)

**அனுபல்லவி**

ஆகம சாய் திரத்தின் அருளை எய்வதற்கு
அரசடியில் அவனும் தான் உதித்தான்
(குரும்பை)

**சரணம்**

ஞானத் குழந்தையாகி நிற்பான்
ஞாலத்தில் நாம் வாழ அருளைத் தருவாய்
எங்கள் வைரவன் குலக் கொழுந்தே – ஐயா
உன்னை யல்லாள் நமக்கு கதியேது (குரும்பை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தின் சின்னமாய் ஞான வைரவர்
ஞானமெல்லாம் மிளிர்பவனே ஞான வைரவா
பரமணனை மதித்திடாத ஞான வைரவா
பக்தர் குறை தீர்த்தருள்வாய் ஞான வைரவா (ஞானத்தின்)

குரும்பையூர்ப் பதியினிலே ஞான வைரவா
எங்கள் குலம் காக்க வந்தவனே ஞான வைரவா
பாடி யாடிப் பூசை செய்வோம் ஞான வைரவா
பாரெல்லாம் காத்திடுவாய் ஞான வைரவா (ஞானத்தின்)

உன்னருளே நாமுனந்தோம் ஞான வைரவா
உம் புகழை யாம் பாட ஞான வைரவா
ஒளித்தீபம் நீ ஐயா ஞான வைரவா
ஓங்காரத் தத்துவனே ஞான வைரவா (ஞானத்தின்)

எல்லையில் காலவ் கொண்டாய் ஞான வைரவா
ஏமாற்றத்துடன் வாழவைப்பாய் ஞான வைரவா
உன்னை வளம்படுத்த வாழ வைப்பாய் ஞான வைரவா
உனதடிமை நாங்கள் ஐயா ஞான வைரவா
மக்கள் நலம் தந்தும் நீயும் ஞான வைரவா
உன் மக்களை காருமையாய ஞான வைரவா (ஞானத்தின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப.நி.

பாடுகின்றேன் அவன் அருளினாலே
என்னைப் பாடவைத்தான் தன் அருள் சக்தியாலே

அ.வி.

அன்பெனும் நோயில்
அவன் கொண்டான் – நல்ல
அருளை எல்லாம் அவன்
அருள் செய்தான் (பாடுகின்றேன்)

சாம்

துன்பங்கள் நீங்க துணை செய்வான்
ஆ.......... ஆ...............
என்றும் துரிதமாய் எம்மைக்
காத்து நிற்பான்
தீய எண்ணத்தைத் தான் ஏந்தி
தீமையைச் சாய்ந்து
அருள் புரிவான் (பாடுகின்றேன்)

**இயற்றியவர் :**

**திருமதி. ரஞ்சினி சிவரூபன்**
**குரும்பசிட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய புனராவர்த்தனத்திற்கு முன்



ஆலயத்தின் தற்போதைய தோற்றம்





ஆலயத்தின் தற்போதைய தோற்றங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர்

ஆதாரம் நீயல்லவோ எங்கள் வைரவா உந்தன்
பாதாரம் தாள் பணிந்தோம் எங்கள் வைரவா

நாளும் உனை நம்பி வந்தால் எங்கள் வைரவா
இங்கே சுழலுகின்ற வினை ஓடும் எங்கள் வைரவா

குரும்பை நகர் கோயில் கொண்ட எங்கள் வைரவா
உன்னை வழிபடுவோர் வாழ்ந்திடுவார் எங்கள் வைரவா

ஊரெல்லாம் உறங்கிவிடும் எங்கள் வைரவா
நீயும் உறக்கமின்றிக் காத்திடுவாய் எங்கள் வைரவா

காலமெல்லாம் நானும் உன்னை எங்கள் வைரவா
தொழவே கவலைகளும் திவாலை ஆகும் எங்கள் வைரவா

இதுபாலாறும் தேனாறும் பொங்கி வரும் பூமி
தமிழன் வாழ்ந்தாலே போதுமையா எங்கள் வைரவா

ஆதாரம் நீயல்லவா எங்கள் வைரவா
உந்தன் பாதாரம் தாள் பணிந்தோம் எங்கள் வைரவா

காலையிலும் மாலையிலும்
கண்ணுறங்கும் வேளையிலும்
காலமெல்லாம் காத்துவரும்
காவல் தெய்வமே எங்கள்
குரும்பையூரில் கோயில் கொண்ட
ஞானத் தெய்வமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி மீது வெற்றி தரும்
உற்ற துணை நீயே உன்னைப்
பற்றுகின்றோம் பரவுகின்றோம்
பாவவினை போக்கு

எங்களினம் வாழவென்று தங்கமான கோயிலிலே
மங்களமாய் வீற்றிருக்கும் பால வைரவா ஒரு
பங்கமின்றி வாழ வைப்பாய் கால வைரவா

ஆலகாலமானாலும் கோலம் மாறிப் போனாலும்
சூலம் வந்து காக்குமங்கே சீல வைரவா எழில்
குரும்பசிட்டி கோயில் கொண்ட கோல வைரவா

கால வைரவா சாமி கோல வைரவா
பால வைரவா சாமி தூல வைரவா
சூல வைரவா சாமி மூல வைரவா
மோன வைரவா சாமி ஞான வைரவா

பார் விளங்கப் பல கோயில்
ஆங்காங்கே இருந்தாலும் குரும்பை
ஊர் விளங்கக் கோயில் கொண்ட வைரவரே சரணம்

நன்றியுள்ள நாயாரை நல்லாதொரு வாகனமாய்
நன்று கண்டு கொண்ட எங்கள் காவல் தெய்வம்

கோல மயில் மீதமரும் வேலவனும் நீயோ அரவம்
மாலையாக அணிந்திருக்கும் தேவனவன் நீயே

நீல வண்ணமாய் விளங்கும்
மாலவனும் நீயோ இல்லை
வையமெங்கும் வாழவைக்கும்
காவல் தெய்வம் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமாலை புகழ்மாலை பூப்போல வடைமாலை
பாமாலை போட வந்தோம் வைரவர் சாமி
உனக்கே பொங்களிட்டோம்
பூசை வைத்தோம் போற்றிப் பாடுகின்றோம்

சித்திரமாய் கோயிலிலே சிறப்புடனே வீற்றிருந்து
நித்தமருள் செய்து வாழும் காவல் தெய்வமே
எம்மைப் பத்திரமாய்ப் பாதுகாப்ப
தொன்பதுண்மையே...

**திரு.இந்திரராஜா**
**- சுவிஸ் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜனைப் பாடல்

குரும்பையூரில் கோயில் கொண்ட
குளவிளக்கே போற்றி
குலம் விளங்க கோடியருள்
தந்திடுவாய் போற்றி
காக்கும் எம் காவல் தெய்வம்
வைரவரே போற்றி
காலமெல்லாம் கைகொடுக்கும்
வைரவரே போற்றி
பார்க்கும் இடந்தனிலே
பரம்பொருளே போற்றி
பாலகனாய் வரங்கொடுக்கும்
பைரவரே போற்றி

பூமாலை உமக்களித்து
புகழ்ந்திடுவோம் போற்றி
துதி பாடி உமைத் தினமும்
துதித்திடுவோம் போற்றி


வாகனமாய் நாயுடனே
வலம் வருவாய் போற்றி
வரம் எமக்குத் தந்த உன்னை
வணக்கிடுவோம் போற்றி

பரவசமாய் நாடி உம்மை
பணிந்து போற்றி தொழுவோம்
பயன் பெறவே அருளை நீயும்
பாரினிலே தருவாய்

திருமதி.சுஜாதா இந்திரராஜா
-சுவிஸ்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலயத்தின் பழைய தோற்றம்



ஆலய
புனராவர்த்தனத்தின் பின்







ஆலயத்தின் தற்போதைய தோற்றங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பைரவர் வழிபாடு

ஓம் ஷவானத் வஜாய பிம்மஹே!
சூல ஹஸ்தாய தீமஹி!
தன்னோ பைரவ : ப்ரசாதயாத!!

மனித நாகரிகம் தொடங்கியதிலிருந்து இறை வழிபாடு தோன்றியது எனலாம். வைரவர் வழிபாடு தமிழர்களின் வீரம் செறிந்த வாழ்க்கை முறையைப் பறைசாற்றும் ஒரு சமய நிலையாகும். அன்புக்கு கண்ணைத் தோண்டும் தொண்டர்களை உடைய சமய சாட்சிகள் வெகுமக்கள் இலக்கியமாகத் திகழும் திருத்தொண்டர் புராணம் வாயிலாக நாம் காணலாம். வைரவர் கிராமதேவன், ஊர்க் காவல் தெய்வம். அஷ்ட திக்குகளை இரட்சிப்பவர் மட்டுமன்றி, காலச் சக்கரத்தை இயக்கும் பரம்பொருளாகும். தேவிக்குரிய சக்தி பீடங்களில் அவருக்குத் துணை நின்று காப்பவராக விளங்குகின்றார். இவரது தோற்றமானது பார்ப்போரைப் பதற வைக்கும் ஆனால் அவரைப் புரிந்தவர்க்கே பக்திதான் வரும்.

கந்தபுராணம் சைவ மக்களின் பண்பாட்டைக் காக்கும் சிவநூல் என்பது ஈழத்து அறிஞர்கள் தமிழகத்து அறிஞர்கள் யாபேரும் ஒப்ப ஆதரிக்கும் இதிகாசம் ஆகும். கந்த புராணத்தில் வைரவப் பெருமானின் உற்பத்தி பற்றி கச்சியப்பச் சிவாச்சாரியார் பக்தியோடு பாடுவார். ஆனால் சங்க காலத்திலே சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களிலே வைரவரைப் பற்றிய குறிப்புக்கள் எதுவும் காணப்படவில்லை என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று.

எல்லா சிவன் கோயில்களிலும் விநாயகர், முரகன் சன்னதி, அம்பாள் சன்னதி இருக்கும். அதேபோன்று நவக்கிரக சன்னதியும் காணப்படும். இன்னொரு முக்கியமான சன்னதியாக விளங்குவது ஸ்ரீ வைரவர் சன்னதி ஆகும். அதுவும் சற்று ஒதுக்குப்புறமாக தனியாக உள்ளடக்கிய பெரும்பாலான கோயில்களின் காவல் தெய்வமாக விளங்குவதும் ஸ்ரீ பைரவர் தான்! பொதுவாக வடகிழக்குப் பகுதியில் தனிச் சந்நிதியில் பைரவர் எழுந்தருளி இருப்பார். சில கோயில்களில் சூரியன், பைரவர், சனி என்ற வரிசையிலும் இருப்பார்கள். சில ஆலயங்களில் நவக்கிரக சன்னதிக்கு அருகில் வைரவர் சன்னதி இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமாக இந்த பைரவர் வழிபாடு முதன் முதலில் வட இந்தியாவில் தோன்றிப் பின்னரே இங்கு பரவியிருக்க வேண்டும். அதுவும் குறிப்பாக ஆதி சங்கரனின் அவதாரத்திற்குப் பின்னரே இந்த பைரவ வழிபாடு ஏற்றம் பெற்றிருக்க வேண்டும் என்பது புலனாகிறது. அவர் தாம் முதன்முதலில் வழிபாட்டு முறைகளைப் பிரித்து ஷண்மத ஸ்தாபனத்தை உருவாக்கி அவற்றுள் ஒன்றான சாக்த வழிபாட்டில் உள்ளடக்கி உள்ளது தான் ஸ்ரீ பைரவ வழிபாடாகும். பைரவர் தம் பெருமையைப் புகழந்து கால பைரவாஷ்டகத்தையும் ஸ்ரீ சங்கரர் பாடியுள்ளார்.

பைரவர் சிவனின் ஒரு அவதாரம் என்ற கருத்தும் உள்ளது. மகன்மை முறை உடையவர் என்ற கரத்தை கிருபானந்தவாரியார் ஒரு சொற்பொழிவில் கூறியிருக்கின்றனார். சிவனின் சூலத்திலிருந்து தோனறியவர் என்றும் கூறப்படுகின்றது. மேலும் கந்தபுராணம், காசி புராணம், கடம்பவனப் புராணம் போன்றன பிற்காலத்தில் தோன்றிய புராண நூல்களிலே தான் பைரவரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. எனவே இதிலிருந்து பொதுவாக பைரவர் வழிபாடு என்பது பிற்காலத்தில் தான் தமிழ்நாட்டில் வேரூன்றியிருக்க வேண்டும் என்ற முடிவிற்கே வரவேண்டியுள்ளது. முதலில் வடநாட்டில் தோன்றிப் பரவி பின்னரே தமிழ் நாட்டில் இலங்கை வழிபாடு பரவியிருக்கக் கூடும். ஆலயத்தில் இறுதி பூசை பைரவருக்கு நடந்தாலும் முதன்மையானாவர் அவர் தான். இத்தகைய சிறப்பு வாய்ந்த பைரவர் குறித்து பல்வேறு வரலாறுகள் கூறப்படுகின்றன.

அந்தகாசுரன் எனும் அசுரன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தால் ஆணவம் கொண்டு தேவ முனிகளை வதைத்தான். தேவர்களைப் பெண் வேடமிட்டு சாமரம் வீசும் ஏவலைச் செய்யும்படி பணித்தான். அந்தகாசுரன் சிவனிடமிருந்து இருள் என்ற பெரும் சக்தியை பெற்றமையினால் உலகை இருள் மயமாக்கி ஆட்சி செய்தான். தேவர்களம் முனிவர்களும் அவனை அழிக்க சிவனிடம் வேண்டினார்கள். தாருகாபுரத்தை எரித்த காலாக்கனியை பைரவமூர்த்தியாக சிவன் மாற்றினார். எட்டு திசைகளிலும் இருந்த இருளை நீக்க எட்டு பைரவர்கள் தோன்றியதாக புராணங்கள் கூறுகின்றன.

நாகங்களை தனது குண்டலங்களாகவும் கைகளில் காப்பு கங்கணங்களாகவும் கால்களை தண்டையாகவும், மார்வில் உபவிதமாக பூனூல் அணிந்தும், இடையில் புலித்தோல், மானிட கபாலம் எலும்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையாகவும் அணிந்து கைகளில் சூலம் பிரம்புடன் நாய் வாகனமேறி ருத்திரக் காட்சி தருவார். பைரவப மூர்த்தங்களில் மொத்தம் 108 வகைகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. அவற்றின் முதன்மையானதும், மூலமானதாகவும் விளங்குவது ஆதி பைரவராகும்.

பைரவ மூர்த்தியை மூர்த்தி பிரம்பசிரேச்சிதர், உக்ர பைரவர், க்ஷேத்ரபாலர், வடுகர், ஆபத்து காரனர், சட்டைநாதர், கஞ்சுமுகன், கரிமுக்தன். நிர்வாணி, சித்தன், கபாலி, வாதுகண், வயிரவன் என்று பல பெயர்களில் வணங்குகின்றார்கள்.

பைரவர் வழிபட்டு கறுப்புக் கயிறு கட்டிக் கொண்டால் திருஷ்டி தோஷங்கள் விலகும் என்பது நம்பிக்கை. இவரது திருவுளத்தின் பன்னிரு ராசிகளும் அடக்கமாயுள்ளன. இவர் பாம்பைப் பூணுலாகக் கொண்ட சந்திரனை சிரசில் வைத்து சூலமம், மழு, பாசம், தண்டம் ஏந்திக் காட்சி தருவார். பைரவரின் மேல் பக்தி கொண்டு தொழுதல் பயமின்றி சுலபமாக வாழலாம்.

**செல்வி கோபினி தேவசீலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளில் குரும்பசிட்டியில் அருள்பாலிக்கும் ஞான
வைரவப் பெருமானின் கும்பாபிஷேகம் சிறப்புற
எமது ஸ்தாபனத்தார் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.




# R.T.S. Distributors

**Kumarakoddam,**
**Kondavil.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வல்ல குரும்பசிட்டி ஞான வைரவப் பெருமானின்
கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்தும்





கஜமுகன் பந்தல் சேவை

நெட்டிலிப்பாய்,

கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குமரகோட்டம்,

கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்று கும்பாபிஷேகம் காணும்
எல்லாம் வல்ல குரும்பசிட்டி ஞான வைரவப் பெருமானின்
அருள் எல்லா மக்களுக்கும் கிடைக்கப்பெற வாழ்த்தும்

# நிலா அன் உதயன் டிஜிற்றல் வீடியோ அன் போட்டோ

# பந்தல்சேவை

**குரும்பசிட்டி அம்மன் கோவிலடி.**

T.P: 077 2695292,
0214905054




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் மக்களின் குறைகள் நீங்கி எல்லாம் வளமும்
கிடைத்து நலமாக வாழ
ஞான வைரவப் பெருமானின்
அருளை வேண்டி நிற்கின்றோம்



போட்டோ ஸ்ரீ

தாவடி, குரும்பசிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலரின் ஊடாக கருணைக் கடவுள்

ஞான வைரவரின் அருட்கடாட்சம்

எல்லோருக்கும் கிடைக்க வேண்டி நிற்கின்றோம்.



# AK Printers

Aadiyapatham Road,
Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

நன்றி மறப்பது நன்றன்று இது ஆன்றோர் அருளிய அருள் வாக்கு இதற்கு அமைவாக அருளிய அருள் வாக்கு இதற்கு அமைவாக எமது வைரவப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் தொடர்பாக உருவாகும் இம் மலரின் வெளியீடு ஆகிய தெய்வீகப் பணிக்கு உதவிய அனைத்து உள்ளங்களிற்கும் இவ் வெளியீட்டாளர்களாகிய அடியோம் இதய பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

எம் குல தெய்வம் எம் பதியைக் காக்கும் எமது ஞான வைரவர் இத்தகைய ஓர் கைங்கரியத்துக்கு எமதுக்கு மன உந்துதல் கொடுத்தார். அவரின் பெரும் கருணையால் மிகக் குறகிய காலத்தில் இறைபணி கைகூட அருள் பாலிக்கப் பெற்றுது முதலில் அவனருளை மனதிருத்தி அம் பெரும் கருணைக்கு மிக்க நன்றியுடன் சிரம் தாழ்த்துகின்றோம். இக் நற் திருப்பணிக்கு காலம் தாழ்த்தாது உடனடியாக வெளியூர் எமது உறவுகள் பெரும் நிதியுதவியையும் தம்மாலான சகல உதவிகளையும் வழங்கியதற் காக முதற்கண் மனமார்ந்த நன்றிகள். இந்த தேவஸ்தானத்தை குறகிய காலத்தில் கட்டி முடித்த சிற்ப வல்லுனர் திரு.சிவராசா, மற்றும் அவரது குழுனவிர்க்கும் வர்ண வேலை செய்து தந்த திரு.R. லோன் அவர்களுக்கும் மற்றும் தேவஸ்தான திருப்பணிக்கு நிதி உதவி வழங்கியும் மணி மண்டபத்தையும் கட்டித் தந்த திரு .மா.கணேசலிங்கத்திற்கும் மூலஸ்தானக் கதவை சிற்ப வேலைகளுடன் அமைத்துத் தந்த திரு.பொ.மேகநாதன் அவர்களிற்கும் மின் இணைப்பு, தண்ணீர் குழாய் வேலை செய்த தே.சஞ்சீவ் அவர்களிற்கும் உளங்கனிந்த நன்றிகள்.

எமது ஆலயம் கும்பாபிஷேக் மிகச் சிறப்பாக நடாத்திய மதிப்புக்குரிய குஞ்சிதபாதக் குருக்கள், இரத்தினசபாபதி ஐயா சிவாச்சாரியார் அவர்களிற்கும் உதவி சிவாச்சாரியார் அவர்களிற்கும் சிரம் தாழ்த்திய நன்றிகள்.

ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிட்ட இம் மலர் சிறப்புற நல் ஆசிகள் வழங்கிய நெட்டியிப்பாய் பிள்ளையார் ஆலய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பிற்குரிய பிரதம குரு சிவஸ்ரீ சிவசுப்பிரமணிய குருக்கள், மதிப்பிற்குரிய நல்லை ஆதீன முதல்வர், மதிப்பிற்குரிய பேராசிரியர் திரு. சண்முகலிங்கன் (முன்னாள் பல்கலைக்கழக துணைவேந்தர்) அவர்கட்கும், கிராம சேவகர், எமது ஊர்ப் பிரமுகர்கள் திரு.அ.சக்திவேல், திரு.கிருஷ்ணசாமி, சைவப் பெரியார் திரு. சிவதட்ணாமூர்த்தி அவர்களிற்கும் எமது பாடசாலை அதிபர், எமது சனசமூக நிலையயங்கள், கிராம முன்னேற்றச் சங்கம் என்பவற்றிற்கும், மலரிற்கு பக்திப் பாடல்கள், ஏனைய ஆக்கங்கள் உரிய நேரத்தில் தந்துதவியவர்களிற்கும், எமது தோளோடு தோள் நின்று எல்லா வழிகளிலும் உதவிய திரு.திருமதி. ந.சிவரூபன் அவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

வைரவரப் பெருமானின் மலர் சிறப்புற வாழ்த்தி உதவிய வணிக வாணிப தொழில் அதிபர் அவர்களிற்கும் மலரை சிறப்புற பதித்த AK பதிப்பகத்தினருக்கும், இன்னும் தோன்றாத் துணையாய் இருந்தவர்கள் அனைவருக்கும் உளங்கனிந்த நன்றிகள் என்றும் உரியன.

இம்மலரின் ஊடாக கருணைக் கடலாம் ஞான வைரவப் பெருமானின் அருட் காட்சம் கிடைக்கப்பெற அவர் சிரம் தாழ் வேண்டி நிற்கின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



AK Printers, Kokkuvil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org